# LAABH SAMACHAR

Volume: 11 | Issue : 08 | NOVEMBER 2022 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





புதிய நிர்வாகத்தில் வெளிவந்த முதல் மாத லாப் ஸமாச்சார் இதழை, மதுரை மாவட்ட ஆட்சியர் **திரு. அனீஷ் சேகர்** அவர்கள் வெளியீடு செய்கிறார்., உடன் சேம்பர் நிர்வாகிகள் & இதழ் குழுவினர்

To





**பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் - PMEGP** என்கிற தலைப்பிலான கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர் திரு. R.P. அசோகன் Divisional Director, KVIC, Madurai அவர்களும், கௌரவ விருந்தினர் திரு. S. செந்தில்குமார் Asst. Director, KVIC, Madurai அவர்களும் இந்த திட்டம் குறித்து விவரித்தனர்.,





METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633
Prop.: B.S. Rajan


உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?
உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
கடின உடற்பயிற்சி இல்லாமல்.
பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க
ஆலோசனை பெற அணுகவும்
L.N.R. தாமோதரன் - 98431 71477



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

– T.R.மோகன்ராம்

குறு, சிறு நிறுவனங்களின் மின் கட்டணத்தை சமீபத்தில் மாநில அரசு உயர்த்தியிருந்தது. இந்த மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி தமிழக முதல்வருக்கும், மின் வாரியத்துக்கும் நமது சேம்பர் கடிதம் அனுப்பியிருந்தது. அதன் பயனாக, இம்மாதம் 09ம் தேதி அன்று அரசு வெளியிட்டுள்ள ஆணையில், குறைந்தழுத்த மின் இணைப்பு கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு உச்சபட்ச பயன்பாட்டு நேரத்தில் வசூலிக்கப்படும் மின் கட்டணத்தை 10% ஆக குறைக்கலாம் என முடிவு செய்துள்ளது. நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் புதிய நிர்வாகத் தொடக்கத்தில் அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு சிறிது பலன் கிடைத்துள்ளது மிகழ்ச்சியளிக்கிறது.

மதுரையில், நமது ஸௌராஷ்ட்ர சமூக அடையாளத்தை முன்னிறுத்தும் வகையில், மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்ற, தன் வெண்கலக் குரலாள் உலக மக்கள் அனைவரையும் கவர்ந்திழுத்த மாபெரும் பாடகர் ஸ்ரீ. டி.எம். சௌந்திரராஜன் அவர்களின் சிலையை மதுரை மையப்பகுதியில் அமைக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. தற்போதுள்ள தமிழக அரசும் இதனை செயல்படுத்த தயாராக உள்ளது என்றாலும், நம் ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் அனைத்தும் இந்த விஷயத்தில் ஒன்றிணைந்து வலியுறுத்தினால், நிச்சயம் அதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதனை கருத்தில்கொண்டு, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி, அனைத்து நம் சமூக அமைப்புகளையும் ஒன்றிணைக்க திட்டமிட்டுள்ளது. ஆகவே, நம் ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் வளர்ச்சிக்கு, புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, புறநகர் பகுதி மக்களை இணைக்கும் வகையிலான பணிகளை செய்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதரவு தாருங்கள். நன்றி

SOURASHTRA CHAMBER OF COMMERCE

# BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Chairmanship** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**20.11.2022** – புதிய நிர்வாகத்தின் முதல் மாத லாப் ஸமாச்சார் இதழானது, மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. அனீஷ் சேகர் அவர்களின் கரங்களால் ஆட்சியர் அலுகத்தில் வெளியீடு செய்யப்பட்டது. அதோடு, மதுரை மாவட்ட வளர்ச்சிக்கு கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது. இந்த சந்திப்பில், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் இதழ் குழுவினர் கலந்துகொண்டனர்.

**26.10.2022** – கட்டுமானத் துறையின், ஜி.எஸ்.டி வரியில் உள்ள குறைகளை தீர்க்க, மதுரை ஜி.எஸ்.டி. வரி ஆணையர் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்தில், நமது சேம்பர் சார்பாக செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆணையர் திரு. ஆரோக்யராஜ் அவர்களிடம் மனு அளித்தனர்.

**01.11.2022** – நவம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம் மாலை 6.30 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் நடைபெற்றது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் – PMEGP என்கிற தலைப்பிலான கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. R.P. அசோகன் Divisional Director, KVIC, Madurai அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. S. செந்தில்குமார் Asst. Director, KVIC, Madurai அவர்களும் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த திட்டம் குறித்து விவரித்தனர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிகுழு சேர்மன் திரு. T.M. ருபேஷ்பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். பொருளாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**05.11.2022** – சேம்பர் செயற்குழு உறுப்பினரான திரு. T.K. சிவநாத்பாபு அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவிற்கு, நமது சேம்பர் குழுவினர்கள் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி, நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தனர்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்




நமது நாட்டின் முதன்மை தொழில் அமைப்பான, CII எனப்படும் இந்திய தொழில் வர்த்தக அமைப்பானது, கடந்த 03.11.2022 அன்று மதுரையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிகான கருத்தரங்கில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக, இதழ் ஆசிரியர் என்கிற முறையில் பங்குகொண்டேன்.

இந்த கூட்டத்தில், அரசாங்க ஆதரவு மற்றும் சட்டப்பூர்வ பாதுகாப்புடன் நிறுவனங்களை எவ்வாறு கொண்டு செல்வது, புதிய யுகத்தில், நிறுவனங்களுக்கான நிதித் தேவை மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல், தொழில்துறை 4.0 வளர்ச்சிப் பாதை, இன்றைய குடும்ப தொழில்களின் போக்கு போன்றவை விவாதிக்கப்பட்டன.

இதில் கிடைத்த அனுபவத்தின்படி, அரசின் அதிகாரப்பூர்வ ஆன்லைன் மார்கெட்டிங் தளமான GeM (Government e-Market)–ல் தொழில் நிறுவனங்கள் தங்களை அவசியம் இணைத்துக்கொள்ள வேண்டும். அதோடு, 70% ஆக இருந்த குடும்பத் தொழில்கள் இன்று 30% ஆக உள்ளது. அதனை அடுத்த தலைமுறையினரிடம் தொடரச் செய்வதற்கு, செல்வாக்கு, நிதி, சமூக பொறுப்பு போன்ற முக்கியமானவைகளை அவர்களிடத்தில் அளித்து ஊக்கப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. இது போன்ற பல பயனுள்ள தகவல்கள் விவாதிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட அனுபவத்தின் சில துளிகளை உங்களுடன் பகிர்ந்துகொண்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மீண்டும் சந்திப்போம், அடுத்த இதழில்.







# INDUS FINANCE LTD

A RBI Registered BSE listed NBFC

Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road,
Nungambakkam, Chennai - 600 034. T : 044 - 28331310
E : contact@indusfinance.in W : www.indusfinance.in

Contact us for
All Your Financial needs*

**Property Loans**
**MSME Loans**
**Education Loans**
**Business Loans**
**Vehicle Loans**
**Life Insurance Policy Loans**
**Rental Discounting**

For More Details contact
**Mr.Kannappan V**
M : 94440 51147

*Conditions apply




திரு. R.P. அசோகன்
Divisional Director, KVIC, Madurai

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நவம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நவம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 01.11.2022 அன்று மாலை 6.30 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் நடைபெற்றது.

**பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் - PMEGP** என்கிற தலைப்பிலான கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. R.P. அசோகன் Divisional Director, KVIC, Madurai அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. S. செந்தில்குமார் Asst. Director, KVIC, Madurai அவர்களும் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த திட்டம் குறித்து விவரித்தனர்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிகுழு சேர்மன் திரு. T.M. ருபேஷ்பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். பொருளாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்தார். சிறப்பு விருந்தினர் திரு. V.S. விஷ்ணுவர்தன் அவர்கள் விருந்தினர்கள் இருவரையும் முறையாக அறிமுகம் செய்து பேச அழைத்தார். முன்னதாக, இந்த நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் சுருக்கமாக பேசினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய சிறப்பு விருந்தினர் திரு. R.P. அசோகன் அவர்கள், KVIC-யின் பணிகள் மற்றும் அதன் சாதனைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். KVIC என்பது காதி மற்றும் கிராமப்புற தொழில் ஆணையம் காந்திய கோட்பாடுகளில் நடத்தப்படும் ஓர் ஆணையம் எனத் தெரிவித்தார். அதன்படி, சமூகத்திற்கு தீங்களிக்கும் தொழில்களைத் தவிர அனைத்து விதமான தொழில்களுக்கும் இவ்வாணையம் பயன்களை அளிப்பதாக தெரிவித்தார்.

பிறகு பேசிய கௌரவ விருந்தினர் திரு. S. செந்தில் குமார் அவர்கள் கூறியதாவது, இந்த KVIC திட்டத்தின் பயன்களை KVIC, KVIB, Coir Broard ஆகிய வாரியம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் கடன் பெறலாம். உற்பத்தி பிரிவிற்கு ரூ. 50 லட்சம் மற்றும் சேவை பிரிவிற்கு ரூ. 20 லட்சம் வரை கடன் பெறலாம். இதில், பொதுப்பிரிவினர்கள் 10% பங்கும், சிறப்பு பிரிவனர் 5% பங்கும், திட்ட மதிப்பீட்டில் முதலீடு செய்ய வேண்டும். அதற்கு, வங்கிக் கடன் அளவு, பொதுப்பிரிவினருக்கு 90%மும், சிறப்பு பிரிவினருக்கு 95% மும் கிடைக்கும். மானியமானது, நகர்புறம் எனில், பொதுப்பிரிவினருக்கு 15%மும், சிறப்பு பிரிவினருக்கு 25%மும் கிடைக்கும். கிராமப்புறம் எனில், பொதுப்பிரிவினருக்கு 25%மும், சிறப்பு பிரிவினருக்கு 35%மும் அரசு மானியம் வழங்குகிறது.

இந்த KVIC திட்டத்தில் விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். www.kviconline.gov.in என்ற இணைய தளத்திற்கு சென்று PMEGP e-portal-ஐ கிளிக் செய்ய வேண்டும். தற்போது Application for New Unit என்ற பட்டனை கிளிக் செய்து அதில் உள்ள படிநிலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். ஆதார், போட்டோ, கல்வித் தகுதி சான்றிதழ் & ஜாதிச் சான்றிதழ் (இரண்டும் தேவைப்பட்டால்), கிராமப்புறம் என்பதற்கான சான்று (தொழில் துவங்கும் இடம் கிராமப்புறம் எனில்) மற்றும் திட்ட அறிக்கை (ஆங்கிலத்தில்) போன்றவை பதிவு செய்வதற்கு தேவையான அடிப்படை ஆவணங்களாகும். மேலும், மானியம் விண்ணப்பிக்கும் முறை, திட்ட அனுமதி, வங்கித் தேர்வு போன்ற பல்வேறு விபரங்களை அளித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைந்தது. அங்கத்தினர்கள் பலரின் கேள்விகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் மிகத்தெளிவாக பதிலளித்தனர். அவர்களுக்கு நமது ஸௌராஷ்டர சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக, பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்
# நிகழ்ச்சியின் புகைப்படத் தொகுப்பு




விருந்து உபசரிப்பு செய்தவர்களை கௌரவித்தல்



கேள்வி–பதில் நிகழ்வு





சேம்பர் தலைவரின் வரவேற்புரை



அங்கத்தினர்கள் கருத்து




சிறப்பு விருந்தினர்களை கௌரவித்தல்





அங்கத்தினர்கள் வருகை





திட்டம் குறித்து கௌரவ விருந்தினர் விளக்குகிறார்

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சந்திப்புகள் மற்றும் நிகழ்வுகள்



## இதழ் வெளியீடு

புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு வெளிவந்த முதல் மாத லாப் ஸமாச்சார் இதழானது, மதுரை மாவட்ட ஆட்சியர் **திரு. அனீஷ் சேகர்** அவர்களின் கரங்களால் 20.10.2022 அன்று, ஆட்சியர் அலுகத்தில் வெளியீடு செய்யப்பட்டது. அதோடு, மதுரை மாவட்ட வளர்ச்சிக்கு கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது. இந்த சந்திப்பிற்கு, (இடமிருந்து வளமாக), இணைச் செயலாளர் திரு. V.V. ராம்லஷ்மண், துணைத்தலைவர் திரு. K.K. தினேஷ், செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரமே் குமார், தலைவர் திரு. T.R. மோகன்ராம், பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன், இதழ்குழு சேர்மன் திரு. S.M. கார்த்தி குமரன், இதழ்குழு உறுப்பினர் திரு. T.K. யாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜி.எஸ்.டி. குறைதீர் கூட்டம்

கட்டுமானத் துறையின், ஜி.எஸ்.டி வரியில் உள்ள குறைகளை தீர்க்க, மதுரை ஜி.எஸ்.டி. வரி ஆணையர் தலைமையில் 26.10.2022 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில், நமது சேம்பர் சார்பாக (இடமிருந்து வலம்), இதழ்குழு ஆசிரியர் திரு. S.M. கார்த்தி குமரன், செயற்குழு உறுப்பினர், ஜி.எஸ்.டி ஆலோசகர் திரு. N.S. பிரேம்குமார் மற்றும் பொருளாளர் திரு. A.B. குமரேஷ் பாபு ஆகியோர் கலந்து கொண்டு இத்துறையின் ஜி.எஸ்.டி. யில் உள்ள பிரச்சினைகள் குறித்து பேசியதுடன், ஆணையர் திரு. **ஆரோக்யராஜ்** அவர்களிடம் மனுவும் அளித்தனர். ஸௌ. சேம்பர் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கையை அவசியம் பரிசீலிப்பதாகத் தெரிவித்தார். மேலும் தகவல் பக்கம்: 10ல் காணவும்.





## சிறப்பு சந்திப்பு

சிட்கான் 2022 மாநாட்டில், தெப்பகுளம் ஸ்ரீமந்நாயகி மந்திர் பள்ளிக்கு கணினி மற்றும் ஆய்வுக்கூட பொருட்கள் வாங்க, சி.எஸ்.ஆர் நதியில் இருந்து ரூ. 3 லட்சம் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் பெற்றுத்தந்தது. இதற்கு பெரிதும் உதவிய, சென்னை, சிஃபி நிறுவனத்தின் கம்பெனி செக்ரேட்டரி **திரு. பூர்ணசந்தர்** அவர்களை 27.10.2022 நமது சேம்பர் செயற்குழு உறுப்பினர்களான கட்டிடம் & நிதி வளர்ச்சி சேர்மன் திரு. K.K. தினேகரன், மக்கள் தொடர்பு சேர்மன் திரு. T.N. சூரியபிரகாஷ் மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. K.D. தேவானந்த் ஆகியோர் அவரது இல்லத்தில் சந்தித்து கௌரவித்தனர்.

✸ தேவையில்லாத நேரங்களில் மின்விசிறி / மின் விளக்குகளை அணைக்கவும்.

✸ மறுசுழற்சிக்கு உகந்த பிளாஸ்டிக்-ஐ மட்டுமே பயன்படுத்தவும்.

✸ இரு சக்கர வாகன ஓட்டிகளின் அளவான வேகம் 40 கி.மீ.,




Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

# சமூக நிகழ்வுகள்

தங்கள் பகுதியில் நடைபெறும் சமூக
நிகழ்வுகள் இடம் பெற வாட்ஸ்ஆப் செய்யுங்கள்
**93441 97952**



நாயகி கல்வி சேவா சங்கம் மற்றும் நாயகி கல்வி சேவா டிரஸ்ட் சார்பாக 16.10.2022 அன்று இலவச வேஷ்டி சட்டை வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில், 500 மூத்த தாய்மார்களுக்கும், 250 தந்தையர்களுக்கும் தீபாவளி நன்னாள் மகிழ்ச்சியுடன் கொண்டாட இலவச வேஷ்டி சட்டைகள் மற்றும் சேலைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில், சௌபாக்கியாஸ் ஜுவல்லரி திரு. T.L. சபரி பாபு மற்றும் பிளாக் பாரஸ்ட் திரு. B. ஆனந்த் ஆகியோர் சமூக தொண்டுக்காக கௌரவிக்கப்பட்டனர். அதோடு, சங்க கட்டிட உதவி செய்த என்ஜினியர் திரு. T.E. யோகேஷ் பாபு மற்றும் வேஷ்டி சட்டை வழங்கிய சாரதி டெக்ஸ்டைல்ஸ் திரு. T.K.D. கிருஷ்ணன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.



தமிழகம் முழுவதும் கிராம சபா கூட்டங்கள் நடத்துவது போல், நகராட்சி பகுதிகளிலும் மக்கள் குறை கேட்கும் தீர்மானங்கள் நிறைவேற்ற நகர சபா கூட்டங்கள் நடத்தப்படும் என முதல்வர் அறிவித்திருந்தார். அதன்படி, நவ.1-ல் நடைபெற்ற ராசிபுரம் நகர சபா கூட்டத்திற்கு, ராசிபுரம் 12-வது வார்டு உறுப்பினர் (சுயேட்சை), நம் சமூகத்தைச் சார்ந்தவரான திருமதி. சசிரேகா சதீஷ் அவர்கள் தனது வார்டில் வீடுகள் தோறும் சென்று தட்டில் அழைப்பிதழ், வெற்றிலை பாக்கு, பழம் வைத்து நகர சபா கூட்டத்திற்கு வருமாறு பொதுமக்களை நூதன முறையில் அழைப்பு விடுத்தது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அவரது ஆர்வமிக்க இந்தப் பணியை நமது சேம்பர் பாராட்டுகிறது.



## கட்டுமானத்துறையின்

# ஜி.எஸ்.டி வரி குறைகளை தீர்க்க... - சேம்பர் கோரிக்கை




கட்டிடத்துறையில் உள்ள ஜி.எஸ்.டி வரி குறித்த பிரச்சனைகளை தீர்க்க இத்துறையின் ஆணையர் திரு. ஆரோக்யராஜ் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் உள்ள கட்டிடத்துறையைச் சார்ந்தவர்களிடம் இருந்து, இத்துறைக்கான ஜி.எஸ்.டி-யில் உள்ள குறைகளை கேட்டறிந்து, மேற்படி கூட்டத்தில் நமது சேம்பர் நிர்வாகிகள் கோரிக்கைகளாக முன்வைத்தனர்.

அதில், கட்டி விற்கின்ற குடியிருப்பு வீடுகளுக்கு தற்போது 45 லட்சம் வரை GST மதிப்பு 1% ஆக உள்ளது. தற்போது மனைகள் விலை பல மடங்கு அதிகமாக உள்ளதால் மேற்கூறிய 45 லட்சம் மதிப்பினை 60 லட்சமாக உயர்த்தினால் பொதுமக்கள் மற்றும் சிறிய அளவில் கட்டுமானம் செய்யும் நடுத்தர பொறியாளர்களின் வாழ்வாதாரம் உயர வாய்ப்பாக அமையும்.

கட்டுமான துறை சேவை வரியில் அரசு / பொது / கார்ப்பரேட் துறை சார்ந்த வரி, கட்டுமான பில்லில் சேர்க்கப்பட்டு அரசுக்காக செலுத்தப்படுகின்றன. ஆனால் தனி நபருக்கான கட்டுமானம் செய்யும் பொறியாளர்கள் / தனிநபர் பில்டர் / தனி இடத்தில் கட்டி விற்பவர் போன்ற தொழில் செய்பவர்களுக்கு Min. GST 3% (தங்க நகை போன்ற அதிக மதிப்புள்ளதால்) விதித்தால் அனைவருடைய Turnover கூடும்.

GST-யில் பதிவு செய்யப்பட்ட பொறியாளர்கள் சராசரி பொது மக்களுக்கு தரும் எஸ்டிமேட்டில் 7% முதல் 10% லாபத்தில் வேலை செய்வதால் தனி நபர்கள் கூடுதலாக 18% செலுத்த விரும்பவில்லை. எனவே அவர்கள் மேசன்களுக்கு வேலைகளை வழங்க விரும்புகிறார்கள். நாம் என்ன செய்ய முடியும்? இதற்கு தீர்வு காணும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறியாளர்களின் நலன் காக்க வேண்டுகிறோம்.

அரசு கட்டிட துறைக்கான கட்டுமான ஒப்பந்தத்தில் GST 12% இருந்து 18% சதவீதமாக உயர்த்தி ஆணை பிறப்பித்தது. ஆனால் அரசு நிறுவனங்கள் 6% சதவீதத்தை இன்றும் ஏற்கவில்லை. இதனால் ஒப்பந்ததாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எந்த அதிகபட்ச மதிப்பில் GST பதிவு தேவையில்லை என உடனடியாக GST Council தீர்வு காண வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீடுகளின் விற்பனை விலை அதிகரிக்குமா?

தமிழகத்தில் நகர், ஊரமைப்புத் துறையான டி.டி.சி.பி., மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமான சி.எம்.டி.ஏ., வாயிலாக, புதிய கட்டடங்களுக்கான திட்ட அனுமதி, மனைப் பிரிவுகளுக்கான ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதற்காக பரிசீலனை கட்டணம், வளர்ச்சி கட்டணம், வைப்புத் தொகை, ஓ.எஸ்.ஆர்., எனப்படும் திறந்தவெளி நில ஒதுக்கீடு, உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய தலைப்புகளில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

தற்போது ஒரு சதுரடிக்கு திட்ட அனுமதி பெற, ரூ. 60 வரை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதில், ஓ.எஸ்.ஆர்., கட்டணம் தனி. இந்நிலையில், கட்டட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணங்களை உயர்த்த முடிவு செய்யப்பட்டு உள்ளதாக தெரிகிறது.

இது தொடர்பாக, கட்டுமானத் துறையினர் கூறியதாவது, கட்டுமான திட்ட அனுமதி கட்டணங்கள் உயர்த்தப்பட்டால், அது வீடுகளின் விற்பனை விலையில் எதிரொலிக்கும். இதனால், புதிய வீடுகளின் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே, கட்டுமான பொருட்கள் விலை உயர்வு, பத்திரப்பதிவு கட்டண உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது வீடுகள் விலையை மேலும் அதிகரிக்க வழிவகுக்கும் எனத் தெரிவித்தனர்.

**Sowndarya Traders**


*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



# சமூக எழுத்தாளரின் எழுச்சிப் பயணம் - ஓர் நேர்காணல்



ஜூட்டிசன்
திரு. ராம ஈஸ்வர்லால்

நமது ஸௌராஷ்ட்ர சமூகம், குஜராத் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி பயணித்து, இன்று உலகம் முழுவதும் பரவலாக வியாபித்து இருக்கின்றனர்.

இன்று சமூக வலைத்தளம் வருவதற்கு முன்பே, நம் சமூக மக்கள் அனைவரையும் ஒரு கயிற்றின் மூலம் தக்க வைப்பதற்காக, நம் நாட்டில், உலகத்தில், எங்கு வசித்து வந்தாலும், இங்கு நடக்கும் நிகழ்வுகள், அங்கு நடக்கும் நிகழ்வுகள் அனைத்தையும், அனைவருக்கும் தெரியப்படுத்தி, தொலை தூரத்தில் இருப்பவர்களையும் நம்மோடு என்றும் தொடர்பில் இருக்கும்படியாகச் செய்யும் மகத்தான பத்திரிகைத் துறையை, தமது சேவையாக செய்து வரும் ஜூட்டிசன் திரு. ராம ஈஸ்வர்லால் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு நமது இதழ் குழுவினருக்கு கிடைத்தது.

சேம்பர்-ன் புதிய நிர்வாகத்தில், இதழ் குழுவின் சார்பில் எடுக்கப்படும் முதல் பேட்டியே ஒரு இதழ் ஆசிரியராக அமைந்திருப்பது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது.

நம் சமூகத்தில் வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளில் ஜூட்டிசன் இதழ் மிகவும் பிரபலமானது. மதுரை தெற்கு மாசிவீதியில், மிகப்பெரிய கூட்டுக்குடும்பத்தில் பிறந்தவர், ஆசிரியர் திரு. ராம ஈஸ்வர்லால் ஆவார். ஒரே வீட்டில் 54 பேர். அனைவருக்கும் ஒரே கழிவறை என்றதும் வேடிக்கையுடன், எப்படி விட்டுக்கொடுத்து வாழ்க்கை வாழ்ந்து இருப்பார்கள் என எண்ணத்தோன்றியது.

இவரது வீட்டுப் பெயர் ஜூட்டின், தந்தை ராமச்சாரி ஆவார்.

1935களில் பல வெற்றிப் திரைப்படங்களை எடுத்துள்ளார்கள். அதில் முக்கியமாக, 1939-ல் வெளிவந்த பேசும்படம், ஹரிதாஸ் போன்றவையும் ஆகும். ராயல் டாக்கிஸ், இவர்களுடைய திரையரங்கம் ஆகும்.

பத்திரிக்கைத் துறையில், குறிப்பாக நம் சமூகத்தில் துவங்க வேண்டும் என இவருக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக முதன்முதலில், ஸௌராஷ்ட்ர கல்சுரல் என்ற பெயரில் துவங்கி பின்னாளில், 1978-களில், இவரது வீட்டுப்பெயர் சேர்த்து **ஜூட்டி சன்** எனப் பெயர்மாற்றம் செய்து இன்று வரையில் தமது பத்திரிகை சேவையை தொடர்ந்து செய்து வருகிறார்.

நம் சமூகத்தில், 6000 பிரதிகளுடன் வெளிவரும் மிகப்பெரிய பத்திரக்கை ஆகும். மாதம் இரண்டு முறை ஜூட்டிசன் இதழ் வெளிவருகிறது.

சமூக நிகழ்வுகள் மட்டுமல்லாது, சட்டம் சார்ந்த செய்திகளையும் வெளியிட்டு வருகிறார். ஜூட்டி லா என்ற பெயரில் வெளியிட்டு வருகிறார். நவீன காலத்து மாற்றம் தேவை கருதி, இ-நியூஸ் பெயரிலும் மின் இதழாக இவரது பத்திரிகை வெளியாகிறது.

இவர், எழுத்தால் அனைவரையும் இணைத்து வருவதோடு மட்டுமல்லாமல், அடுத்தகட்டமாக, தமது ஒலி அலையின் மூலமாக அனைவரையும் இணைத்து வருகிறார். ஆம், பத்திரிக்கை மட்டுமல்லாமல், வானொலியையும் துவக்கியுள்ளார். JS ஆடியோ ரேடியோ என்ற பெயரில் உலகம் முழுவதும் வாழும் நம் சமூக நெஞ்சங்களின் செவிக்கு நம் சமூக மொழியை காதோடு உரவாடி வருகிறார்.

ஆயிரம் பிறைகளை காணப்போகும் இவரைப்பற்றி, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் உள்ள ஆயிரம் உறுப்பினர்களுடன் இந்த பேட்டியை கொண்டு சேர்ப்பதில், நமது இதழ்குழு பெருமைகொள்கிறது. மீண்டும் அடுத்த இதழில் புதிய சாதனையாளரை சந்திப்போம். நன்றி.


Off. : 0452 - 2629071, 98431 72668, 63740 00979 Estd. 1991
Machine Enquiry 94860 01366
MURALI AGENCY
Suppliers & Importers : Machines & Materials for Offset Printers, Notebook & Corrugated Box Manufacturers
13-A, Madurai Veeran Kovil Street, Manjanakara Street, MADURAI - 625 001. Tamilnadu. INDIA
E-mail : muraliagency@gmail.com | sales@muraliagency.com | web : www.muraliagency.com www.indiamart.com/muraliagency/
விற்பனை & இறக்குமதியாளர் - அட்டைப் பெட்டி, நோட்டுக் தயாரிப்புக்கு தேவையான மெஷின்கள், ஆப்செட் பிரிண்டிங் பிரஸ், அட்டைப்பெட்டி & நோட்டுக் தேவையான பிரிண்டிங் இங்க், பின்காயில், ஸ்பேர் பார்ட்ஸ் & இதர பொருட்கள் கிடைக்கும்.

VEDHAVALLI HOLIDAYS

# வேதவல்லி ஹாலிடேஸ்

Since 2002 in Travel Industry

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

## TOUR PACKAGES

Domestic / International





## FLIGHT TICKETS

Domestic / International

IndiGo

एअर इंडिया AIR INDIA

spiceJet flying for everyone

Emirates

## VISA TOURIST VISA



**CAR - RENTAL**
**TRAIN - TICKETS**
**BUS - TICKETS**

## Contact now : 99430 31237

Domestic & International Tour Planners Car Rental | Flight Booking

# வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை

www.vedhavalliholidays.com

VEDHAVALLI HOLIDAYS

## இரங்கல்



மடீட்சியாவின் முன்னாள் தலைவர், மடீட்சியா அறக்கட்டளை செயலாளர், லகு உத்யோக் பாரதி அமைப்பின் தலைவர் திரு. கே.ஆர். ஞானசம்பந்தன் அவர்கள் கடந்த 02.11.2022 அன்று காலமானார். மிகச் சிறந்த தொழிலதிபர், சிறு, குறு தொழில்களின் வளர்ச்சிக்காக சிறப்பாக செயலாற்றியவர். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ல் இரண்டு முறை, நம் அங்கத்தினர்களுக்காக நடத்தப்பட்ட சிறு, குறு தொழில் மேம்பாட்டு நிகழ்ச்சியில் பேசியவர். இவரது மறைவு தொழில்துறை சார்ந்த அனைவருக்கும் பேரிழப்பு. அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அவரது ஆன்மா சாந்தி அடைய நமது சேம்பர் இறைவனையும் பிரார்த்திக்கிறது.

## Do not share Aadhaar

Do not share photocopy of your Aadhaar with any organizations because it can be misused. Alternatively, please use a masked Aadhaar which dilsplays only the last 4 digits of your Aadhaar number. It can be downloaded from UIDAI official website https://myaadhaar.uidai.gov.in. Please select the option "Do you want a masked Aadhaar" and proceed to download.

The existence of any Aadhaar number can be verified at https://myaadhaar.uidai.gov.in/verifyAaadhaar . To verify offline, you can scan the QR code on e-Aadhaar or Aadhaar letter or Aadhaar PVC card using QR code scanner in th mAadhaar mobile application.

Please avoid using a public computer at an internet / knock to download e-Aadhaar. However if you do so, please ensure that you delete all the downloaded copies of e-Aadhaar permanently from that computer.

Only those organizations that have obtained a User License from the UIDAI can use Aadhaar for establishing the identity of a person. Unlicensed private entities like hotels or film halls are not permitted to collect or keep copies of Aadhaar card. It is an offence under the Aadhaar Act 2016. If a private entity demands to see your Aadhaar card, or seeks a photocopy of your Aadhaar card, please verify that they have valid User License from the UIDAI.

- Ministry of Electronics & Information Technology (Meity)
date: 27.05.2022

## சமூக சேவகருக்கு சேம்பர்-ன் இரங்கல் செய்தி



பெயர் : **கே.எஸ். கிஷோர் குமார்**
பொறுப்பு : சிறப்பு அழைப்பாளர், ஸௌ. சேம்பர்
தொழில் : ஶ்ரீ சிவராம் டெக்ஸ் ஏஜென்சி, புதுடில்லி
மறைவு : 01.11.2022 / செவ்வாய்க்கிழமை

நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தின் முக்கியப் பிரமுகர், டெல்லி ஸௌராஷ்ட்ர சங்கத்தின் தலைவரும், நமது ஸௌராஷ்டர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சிறப்பு அழைப்பாளருமான திரு. K.S. கிஷோர் குமார் அவர்கள் கடந்த 01.11.2022 அன்று பிற்பகல் இறைவனடி சேர்ந்தார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொழில் நிமித்தமாக 35 வருடங்களுக்கும் மேலாக டெல்லயில் வசித்து வந்தவர். இவர், டெல்லி ஸௌராஷ்ட்ர அமைப்பில் பல்வேறு சேவைகளை செய்து வந்தவர். கல்வி, வேலைவாய்ப்பு / பணி நிமித்தமாக தமிழகத்திலிருந்து செல்லும் நம் சமூகத்தவர்களுக்கு தேவையான உதவிகளையும், வழிகாட்டுதல்களையும் செய்து வந்தவர்.

குறிப்பாக, கொரோனா சமயத்தில் மதுரையிலிருந்து காசி யாத்திரை சென்ற குழுவினர் வாரணாசி ஊரடங்கில் தவித்தவர்களை மதுரைக்கு பத்திரமாக கொண்டு வந்து சேர்த்ததில் இவரது பங்கு அளப்பரியது.

சமூக மேம்பாட்டிற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் வரும் சமூகத்தவர்களுக்கு வேண்டிய உதவிகைள செய்தவர்.

நமது சேம்பர்-ன் சிட்கான் மாநாட்டு பணிகளிலும், டெல்லியில் முக்கியப்பிரமுகர்களை சந்திப்பதற்கும் மிகவும் உதவியாக இருந்தவர்.

சேம்பர்-ல் உள்ள அங்கத்தினர்களுக்கு, டெல்லியில், தொழில் சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்தவர். மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஜி.எஸ். அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்.

இவ்வாறு பல்வேறு சமூக பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டவர் இன்று நம்முடன் இல்லாதது மிகுந்த வருத்தமளிக்கிறது. அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.





Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.
Siva Dental Care
TYPES OF DENTAL CARE
Rct
Orthodontics
Dental Implants
Dentures
Dental Surgery
Cosmetic Dentistry
Oral Hygiene
Periodontology
தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி
243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# வரி – கேள்வியும் பதிலும்

**ஒரு Assessee தனது வியாபாரத்திற்காக Land மற்றும் Building சேர்த்து வாங்குகிறார். இரண்டுக்கும் சேர்த்து ஒரே மதிப்பில் Depriciation போட விரும்புகிறார். சரியா?**

Land என்பதற்கு வருமான வரியில் தேய்மானம் என்பதில்லை. ஆனால், Land என்பதின் மதிப்பு Building என்பதின் மதிப்போடு சேர்ந்து விட்டால், பிரிக்க முடியாவிட்டால், இரண்டுக்கும் சேர்த்து தேய்மானம் கணக்கிடலாம் / கணக்கிட முடியாதென்று மாறுபட்ட தீர்ப்புகள் உண்டு. CIT Vs. Rajesh Exports (2006); Burgamann India P. Ltd. (2015)

எனவே, Land / Building ஆகியவற்றுக்குத் தனித்தனியாக மதிப்பு கணக்கிட்டு Building என்பதற்கு மட்டும் Depriciation கோரலாம்.

---

**ஒரு கூட்டு வியாபாரத்தில் இரண்டு கூட்டாளிகளில் ஒருவர் இறந்து விட்டார். வருமான வரி / ஜி.எஸ்.டி., பார்வை என்ன?**

வருமான வரியின் முறையில், Indian Partnership Act Sec.42-ன் படி இரண்டு பேர் உள்ள கூட்டு வியாபாரத்தில் ஒரு கூட்டாளி இறந்துவிட்டால், அந்த கூட்டு வியாபாரம் தானாக கலைந்து விடும். இறந்த தேதி வரை P & L, Balance Sheet போட்டு வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும். வருமான வரி ரிட்டனை அதற்கான உரிய தேதியில் (Due Date) தாக்கல் செய்தால் போதுமானது. வருமான வரித்துறைக்கு தனியாக தகவல் தெரிவிக்கத் தேவையில்லை. Tax Audit Report-ல் இது குறித்துக் கூறினால் போதும்.

ஜி.எஸ்.டி., முறையில், கூட்டு வியாபாரத்தில் உள்ள Stock / GST வரிக்குட்பட்ட மற்ற சொத்துக்களுக்கு Invoice போட்டு GST வரியிட்டு அதனை பின் தொடரும் தனி நபருக்கு அதனை விற்கலாம். அதன்பின் தொடர்பவர் அதற்கு ITC எடுக்கலாம். இதை தவிர வரியில்லாமல் Successor என்று பின் தொடர்பவருக்கு சரக்கினை மாற்றலாம். இதற்கு ITC 01 தாக்கல் செய்ய வேண்டும்.

**Place of Supply & Service:** ஜி.எஸ்.டி., என்பது Destination based என்பது தெரியும். இப்போது Bill to Karnataka - Ship to Tamilnadu என்று தமிழ்நாட்டில் உள்ள ஒரு வணிகர் செய்யும் சப்ளையை CGST வரிக்குட்பட்டது என்று சொல்லப்படுகிறது. இங்கே Bill to other State - Ship to Local.

அதே நேரத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஒரு வணிகருக்கு அயல்நாடு, சீன கம்பெனி ஒரு ஆர்டர் கொடுக்கிறது. அந்த ஆர்டரை தமிழ்நாட்டில் உள்ள ஒரு வணிகருக்கு டெலிவரி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இங்கே Bill to China - Ship to Tamilnadu. இது IGST–ல் வருமா? அல்லது CGST மற்றும் SGST-யில் வருமா?. இதற்கான பணம் அயல்நாட்டு டாலராக வங்கியில் வருகிறதால் Export கணக்கில் வருமா?

இந்த சந்தேகம் அனைவருக்கும் வரும். Export பொருத்தவரை பணம் டாலராக வருவதில் மட்டுமே அடங்காது. பொருள் வெளிநாட்டுக்கு சென்றிருக்க வேண்டும். இங்கே பொருள் வெளி நாட்டிற்கு செல்லாததால் இது Export அல்ல. இங்கே, தமிழ்நாட்டில் உள்ள ஒரு வணிகர் தமிழ்நாட்டில் உள்ள மற்றொரு வணிகருக்கு அனுப்பியிருக்கிறார். பொருள் போய் சேர்ந்த இடம் தமிழ்நாடு. ஆகவே இது லோக்கல் சேல்ஸ் தான் CGST மற்றும் SGST வரிக்குட்படும். அதுவே,

அயல்நாட்டு கம்பெனி கொடுத்த ஆர்டர் தமிழ்நாட்டில் உள்ள ஒரு வணிகரிடமிருந்து அயல்மாநிலத்திற்கு Ship ஆக இருந்தால் அது IGST வரிக்குட்படும்.

---

**என் நிறுவன ஊழியர்களின் சம்பளத்திற்கான TDS என்பதை காலாண்டுக் கொருமுறை பிடித்தம் செய்கிறேன். இந்தப் பிடித்தத்தை அந்த நிதியாண்டு இறுதியில் டெபாசிட் செய்யலாமா?**

இயலாது. Sec.200 / Circular No.20/2020/3.12.2022 என்பதன் படி TDS பிடித்தம் செய்யப்பட்ட மாத இறுதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அதனை டெபாசிட் செய்ய வேண்டும்.


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்





98430 72626
98425 72626

ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# மத்திய அரசின் டிஜிட்டல் கரன்சி அறிமுகம்




தற்போது புழக்கத்தில் உள்ள காகித / நாணய வடிவிலான ரூபாய்கள், இந்திய அரசிடம் உள்ள தங்கத்திற்கு இணையான அளவிற்கு ரூபாய் நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டதாகும்.

பல காலமாக, காகித மற்றும் நாணய வடிவிலான ரூபாய்களை நேரே கொடுத்துத் தான் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருகிறோம். சமீபகாலமாக, அதில் சற்று மாறுபட்டு, வங்கியின் மூலமாக டிஜிட்டல் முறையில் அனைத்து விதமான லோன், மின்சாரம், வாடகை, சேமிப்பு போன்றவை மேற்கொள்ளுதல். அதோடு, டெபிட் கார்டு பயன்படுத்தி பெட்ரோல், மளிகை பொருள் மற்றும் பல்வேறு பொருட்களை டிஜிட்டல் டிரான்சாக்சன் முறையில், அதாவது, காகிதமில்லா பணப் பரிமாற்றத்திற்கு வளர்ச்சியடைந்துள்ளோம்.

இந்த சூழலில், மத்திய ரிசர்வு வங்கியின் .CBDC (Central Bank Digital Currency) மூலம் புதிதாக 'டிஜிட்டல் கரன்சி' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 2022-23 நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கலின்போது விரைவில் டிஜிட்டல் நாணயம் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார். அறிவிப்பின்படி, இம்மாதம் (நவம்பர்) 1-ம் தேதி அன்று, இந்திய ரிசர்வு வங்கி டிஜிட்டல் ரூபாய் வெள்ளோட்டமாக அறிமுகம் செய்துள்ளது.

சோதனை முயற்சியாக சில குறிப்பிட்ட உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் டிஜிட்டல் ரூபாய் அறிமுகம் செய்துள்ளது. அரசு பத்திரங்கள் சம்பந்தமான பரிவர்த்தனைகளில் இவை முதற்கட்டமாக பயன்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டிஜிட்டல் ரூபாய் அறிமுக திட்டத்தில், SBI, HDFC, ICICI, BOB, UBI, Kotak Mahindra Bank, Yes Bank, IDFC First Bank and HSBC உள்ளிட்ட ஒன்பது வங்கிகள் பங்கேற்கின்றன. சில்லரை பிரிவில் இன்னும் ஒரு மாதத்துக்குள்ளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் டிஜிட்டல் ரூபாய் அறிமுகம் செய்யப்படும் என்று ரிசர்வு வங்கி தெரிவித்துள்ளது.

தனியார் மெய்நிகர் நாணயங்கள் பணமோசடி பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் வரி ஏய்ப்பு போன்றவற்றுக்கு வாய்ப்பளிப்பதாக உள்ளதால் அவற்றை ஏற்க இந்திய அரசும், ரிசர்வு வங்கியும் தயங்கி வருகிறது. இது போன்ற சிக்கல்களை தவிர்க்கும் வகையில் டிஜிட்டல் ரூபாயை அறிமுகம் செய்யும் முயற்சியில் ரிசர்வு வங்கி தீவிரமாக உள்ளது.

இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் கரன்சியை டிஜிட்டலுக்கு மாற்றி உள்ளார்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் நம்மைப்போல முதற்கட்ட சோதனை அளவில் உள்ளார்கள். அதில் ரஷ்யாவும் ஒன்று. இதுவரை பனிரெண்டு நாடுகள் முயற்சி செய்து தோல்வியும் அடைந்துள்ளது.

இந்த டிஜிட்டல் ரூபாய் என்பது பிட்காயின் போல என்கிரிப்ட் செய்யப்பட்ட எண்கள் கொண்டது. அதன் பிளாக் செயின் மூலம் அதன் ஆதியும் அந்தமும் அறிய முடியும் என்பதால் ஏமாற்றுவது சிரமம்.

இந்திய அரசின் டிஜிட்டல் ரூபாய் 'e₹' என்று குறியிடுகிறார்கள்.

காகித வடிவிலான ரூபாய்களால் பல குறைபாடுகள் உள்ளன. ரூபாய் நோட்டுக்களை அடிக்க நிறைய செலவு ஆகிறது. உதாரணமாக ஐநூறு ரூபாய் நோட்டு அடிக்க ரூ. 2.57 செலவாகிறது. அந்த நோட்டுக்கள் சில வருடங்களில் கிழிந்து போய்விடுகிறது. அதனால் அதை மீண்டும் அடிக்க வேண்டியுள்ளது. என்னதான் பாதுகாப்புகள் இருந்தாலும், கள்ள நோட்டுக்களை அடிக்க முடிகிறது. கருப்புப் பணம், ஊழல், லஞ்சம், திருட்டு, வரி ஏய்ப்பு என இன்னும் பல காரணங்கள் அடுக்கிக்கொண்டே போகலாம். மேற்படி குறைகளை இந்த டிஜிட்டல் கரன்சி பயன்பாட்டினால் தடுக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# நிறுவனங்கள் ஊழியர்களின் ESI பதிவுகளை சரியாக அளிக்கத் தவறினால் கடும் நடவடிக்கை

இந்திய அரசின், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம்) தொழில் நிறுவனங்களுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில்,

ESI வழக்கமான அடிப்படையில் முதலாளிகளின் பதிவுகளை ஆய்வு செய்து வருகிறது. முதலாளிகளுடன் இணைக்கப்பட்ட பணியாளர் தரவுத்தளத்தை ஆய்வு செய்ததில் பல ஊழியர்களின் வங்கிக் கணக்கு எண்கள் ஒரே பொதுவான வங்கிக் கணக்கு எண்ணில் குறியிடப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. உண்மையில், ஒவ்வொரு பணியாளருக்கும் தனிப்பட்ட வங்கிக் கணக்கு எண் இருக்க வேண்டும். ஆனால், பல ஊழியர்கள் ஒரே கணக்கு எண்ணைக் கொண்டிருப்பது ஒரு கடுமையான குறைபாடாக பார்க்கப்படுகிறது. மேலும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்குச் செலுத்த வேண்டிய பயன்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு இது வழி வகுக்கிறது.

சில HR பணியாளர்கள் / வெளிப்புற ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிறுவனத்திற்கான பணியாளர் பதிவு செய்யும் பணியுடன், நிறுவனத்தின் உள்நுழைவு சான்றுகளைப் பயன்படுத்தி, அவர்களின் கணக்குகளில் பணம் செலுத்தும் தொகையை தவறாகப் பயன்படுத்துவதற்கும், முடக்குவதற்கும் இந்த முறை செயல்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது. இந்த செயல், IPC-ன் படி "ஏமாற்றுதல்" ஆகும். மேலும் நிறுவனத்தின் நற்சான்றிதழ்களைப் பயன்படுத்தி செய்யப்படுவதால், "நிறுவனம்" கூட உடந்தையாகிறது மற்றும் IPC-ன் கீழ் வழக்குத் தொடரப்படும்.

மேற்கூறிய சூழ்நிலையின் பார்வையில், ESIC போர்ட்டலில் பணியாளர்களைப் பதிவு செய்யும் போது, அத்தகைய இடர்பாடுகளைத் தவிர்க்க, உள்நுழைவுச் சான்றுகளைப் பயன்படுத்துவதில் கடுமையான கட்டுப்பாடு மற்றும் விழிப்புடன் செயல்படுமாறு அனைத்து முதலாளிகளையும் எச்சரிக்க விரும்புகிறது.

ஊழியர்களைப் பதிவு செய்யும் போது வங்கி மற்றும் ஊழியர்களின் இதர விவரங்கள் போர்ட்டலில் சரியாக அளிக்கப்பட்டுள்ளதா என்பதை அனைத்து முதலாளிகளும் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மேலும், சரியான துணை ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே தரவு வழங்கப்படுவதை உறுதி செய்யவும். இவ்வாறு அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வணிகர்கள் கவனத்திற்கு...

தமிழகம் முழுவதும், கடந்த 1ம் தேதி முதல் வணிக வரித்துறை சார்பில், தினமும் கடைகளில் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டு 70 வாகனங்கள் ஏற்பாடு செய்து, சுற்றும் படை அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றும்படை குழுவினர், தினமும் 4 வணிக நிறுவனங்களில் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் மூலம், ஒரு மாதத்தில் 350 ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என அரசு தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, வியாபாரிகள் ஜி.எஸ்.டி., தொடர்பான பில், இ-வே பில் மற்றும் நிறுவன இருப்புகளை சரியாக வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறது.

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0011544

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

**அனுபவ மொழிகள்**

- மாற்று வழியை கண்டுபிடிக்கும் ஆற்றலுக்கு விவேகம் என்று பெயர்
- வாழ்வில் நிறையப்பெற வேண்டுமென்றால், உன்னைய அதிகமாகக் கொடு
- பொறுமை மிகுந்த மனிதனின் கோபத்தில் எச்சரிக்கையாக இருங்கள்
- உன் கடமையச் செய், அப்போது தான் உன் தகுதியை நீ அறிந்துகொள்ள முடியும்
- வாழ்க்கையில் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது நம் மனம் தான்


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499

EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

# பிரிட்டன் பிரதமரானார்
## இந்திய வம்சாவளி
# ரிஷி சுனக்



## தேர்தல் வெற்றி...

ஐரோப்பிய நாடான பிரட்டனின் பிரதமர் பதவியை, போரிஸ் ஜான்சன் கடந்த ஜுலையில் ராஜினாமா செய்தார். ஆளும்பழமைவாய்ந்த கட்சியின் தலைவராக இருப்பவரே பிரதமராக முடியும். இதையடுத்து நடந்த தேர்தலில், இந்திய வம்சாவளியான முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக்கை வென்று, முன்னாள் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ் பிரதமரானார்.

ஆனால், அவர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தின. இதனால், 45 நாட்கள் பதவியில் இருந்த நிலையில், லிஸ் டிரஸ் சமீபத்தில் பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

இதனால், கட்சியின் புதிய தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது. கட்சியின் 1.70 லட்சம் பிரதிநிதிகள் வாக்குகளின்படி, போரிஸ் ஜான்சன், ரிஷி சுனக் ஆகிய இருவரின் பெயர்கள் முன்னிலையில் இருந்தன. இதற்கிடையே, பார்லிமென்டின் பிரதிநிதிகள் சபையின் தலைவரும், பெண் தலைவரும், எம்.பி.,யுமான பென்னி மோர்டார்ட், தலைவர் பதவிக்கு போட்டியிடுவதாக அறிவித்தார்.

தலைவர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்வதற்கு சில மணி நேரமே இருந்த நிலையில், போட்டியில் இருந்து விலகுவதாக போரிஸ் ஜான்சன் அறிவித்தார். இதையடுத்து, ரிஷி சுனக்குக்கு ஆதரவு அதிகரித்தது.

அவருக்கும் 178க்கும் மேற்பட்ட எம்.பிக.கள் ஆதரவு இருப்பதாக தகவல் வெளியானது. பென்னி மோர்டார்ட்க்கு, 40க்கும் குறைவான எம்.பி., களின் ஆதரவே இருந்தது. கட்சி விதிகளின்படி, குறைந்தபட்சம் 100 எம்.பி.,க்களின் ஆதரவு இருப்பவரே தலைவர் பதவிக்கு போட்டியிட முடியும்.

இதனால், ரிஷி சுனக் போட்டியின்றி கட்சித் தலைவராக தேர்வானார். அவரே பிரதமராகவும் உள்ளார். பிரிட்டனின் பிரதமராகும் வாய்ப்பு, இந்தியாவை பூர்வீகமாக உடையவருக்கு கிடைத்தது அங்கு வாழும் இந்தியர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இவரைப் பற்றி...

ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். பிரிட்டன் வரலாற்றில், இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒருவர் பதவி வகித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினரான இவர் கடந்த 2015 முதல் ரிச்மண்ட் (யார்க்ஸ்) நாடாளுமன்ற உறுப்பினராக (எம்.பி) இருந்து வருகிறார். ரிஷி சுனக், இங்கிலாந்தில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றபோது பகவத்கீதையின் மீது உறுதிமொழி எடுத்திருக்கிறார்.

இவரின் பெற்றோர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். 1960-களில் கிழக்கு ஆப்ரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்துள்ளனர். சுனக்கின் தந்தை யாஷ்வீர் சுனக், தேசிய சுகாதார சேவை மையத்தின் பொது மருத்துவராக சேவை புரிந்தவர். அவரின் தாயார் உஷா சுனக் ரசாயன கடை ஒன்றை நடத்தி வந்தவர்.

ரிஷி சுனக்கின் மனைவி, இன்ஃபோசிஸின் தலைவர் நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷதா மூர்த்தி ஆவார்.

ரிஷி சுனக்கின் ஆண்டு வருமானம் 700 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல். இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். 'எ போட்ரேட் ஆஃப் மார்டர்ன் பிரிட்டன்' மற்றும் 'பொருளாதார வணிகம்' சார்ந்த பல புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார்.

கோவிட்-19 நோய்தொற்று காலக்கட்டத்தில் ரிஷி சுனக் அரசியலிலும் கன்சர்வேடிவ் கட்சியிலும் மிகவும் பிரபலமானவராக இருந்துள்ளார்.

கடந்த செப்.2020-ல் Ipsos MORI நடத்திய வாக்கெடுப்பில், 1978-ல் லேபர் டெனிஸ் ஹீலிக்குப் பிறகு, சுனக் தான் அதிக திருப்தியான மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். எனவே அவர் அடுத்த பிரதம மந்திரி வேட்பாளராகும் வாய்ப்பும் அப்போதே இருந்ததுள்ளது.

# திருக்குறள் கூறும் காரியம் செய்யும் முறை

- ஒரு காரியம் செய்யப்புகும் முன் ஆலோசிக்க வேண்டும். ஆலோசிப்பதன் நோக்கம் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானம் செய்வதற்காகத்தான். செய்யத் தீர்மானித்த பின் தாமதிப்பது தீங்கானது.
- எல்லாக் காரியங்களும் உடனே செய்யக் கூடியனவாக இருக்காது. அதனால், நிதானமாகச் செய்ய வேண்டிய காரியத்தை நிதானித்துச் செய்ய வேண்டும். உடனே செய்ய வேண்டிய காரியத்தில் தாமதம் கூடாது.
- வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் மேற்கொண்ட காரியத்தைச் செய்துவிடுவது நல்லது. அந்த வாய்ப்பு இல்லாத போது முன் எண்ணியபடி காத்திருந்து செய்ய வேண்டும்.
- ஆலோசித்துப் பார்த்தால், மேற்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்யாமல் மிச்சம் விட்டுவைப்பதும், பகைமையைத் தீர்த்து விடாமல் மிச்சம் விட்டுவைப்பதும் நெருப்பை அவிக்கும்போது முற்றிலும் அவித்துவிடாமல் ஒரு பொதி நெருப்பை மிச்சம் விட்டு விடுவது போலப் பின்னால் பெருந்துன்பம் உண்டாக்கும்.
- ஒவ்வொரு காரியத்தையும் அதன் நோக்கம், அதற்கு வேண்டிய சாதனங்கள், செய்யத் தகுந்த பருவகாலம், செய்ய வேண்டிய செயல் முறை நுணுக்கம், தக்க இடம் ஆகிய ஐந்தையும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆராய்ந்து அறிந்துகொண்ட பிறகுதான் செய்ய வேண்டும்.
- அந்த ஐந்தும் பொருந்திய பிறகும், காரியம் முடிவுறுமா? அல்லது அதற்கு இடையூறுகள் வந்து கெட்டுப்போகுமா? கெடாமல் முடிந்தாலும் உடனே கிடைக்கக்கூடிய பலன்கள் அதற்காகப் பட்ட துன்பங்களுக்குத் தகுந்தனவாக இருக்குமா? என்பனவற்றையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.
- காரியம் செய்யப் புகுந்தவன் செய்ய வேண்டிய முதற்காரியம். அந்தக் காரியத்தின் உளவுகளை அறிந்தவர்களுடைய உதவியைத் தேடிக்கொள்வதே.
- காரியத்தின் அந்தரங்கங்களை அறிந்த அனுபவக்காரன் அறிவைத் தேடிக்கொள்வது, பழகின யானையைக் கொண்டு புதுக் காட்டு யானையைப் பிடித்துக் கட்டுவதைப் போன்றது.
- பகைவர்களை வெல்லுவதற்குத் துணைவர்களைத் தேடி அவர்கள் உதவிக்காக அவர்கள் மகிழும்படி பல உபகாரங்களைச் செய்து கொண்டிருப்பதைவிடப் பகைவர்களையே நண்பர்களாக்கிக் கொள்வது விரைவில் பலனளிக்கும்.
- தம்மிலும் வலிமை மிகுந்தவர்கள் தம்மீது பகை கொண்டு வந்துவிட்டால், அவர்களை எதிர்ப்பது மூடத்தனம். இடம், பொருள், ஏவல்களிற் குறைந்தவர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் பயத்தால் நடுங்குவதைக் கண்டு அவர்களுக்கு அழிவு வராதிருப்பதற்காகத் தம்மினும் வலிமையுள்ளவர்களை எதிர்க்காமல் பணிந்துபோவார்கள். அதற்காக அவர்களைப் பிறர் குறை கூறினாலும் பொறுத்துக்கொள்வார்கள்.


HOUSING LOAN
எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ் மூலம் கடன் பெறுவதற்கு அணுகவும்

LIC HFL - கடன் பெற பொருத்தமானவர்கள்
- மாத சம்பளம் PF பிடித்தபின் வங்கி மூலம் பெறுபவர்கள்
- ஓய்வூதியம் (Pension) பெறுபவர்கள்
- கடந்த மூன்று வருட வருமானவரி கணக்கினை அந்தந்த வருடங்களில் தாக்கல் செய்த வணிகர்கள் மற்றும் சுய தொழில் செய்பவர்கள்
- வெளிநாட்டில் பணி புரிபவர்கள். (மாத சம்பளம் அங்குள்ள வங்கி மூலம் பெற வேண்டும்)

| | |
|---|---|
| வீடு | வீடு கட்டுவதற்கு, வாங்குவதற்கு, விரிவாக்கத்திற்கு, புதுப்பிப்பதற்கு, அடமானத்திற்கு கடன் பெறலாம். வேறு நிறுவனங்களில் வாங்கிய கடனை மாற்றி கூடுதல் கடன் பெறலாம். |
| மருத்துவமனை | மருத்துவனை புதிதாக கட்டவும், ஏற்கனவே உள்ளவற்றை புதுப்பித்தலுடன் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும் கடன் பெறலாம். |
| அலுவலகம் | புதிதாக கட்டவும், விரிவுபடுத்தவும் கடன் பெறலாம். |
| வணிக வளாகம் | தங்களது கட்டிடத்தில் உள்ள நிறுவனங்களின் மாத வாடகை அடிப்படையில் LRD திட்டத்தின் மூலம் கடன் பெறலாம். |

LIC HFL
LIC HOUSING FINANCE LTD





திருமதி. R.M.திலகவதி
செல்: 98426 76174, 96006 76174
E-mail: thilaga4464@gmail.com






STEP IN & BUY
at Madurai
VILLAKKUTHOON BAZAAR





Just Born..
- Baby Wears
- Joblas
- Gift Dress Packs
- Quick Dry Towels
- All Baby Products & Accessories

B THE BABY SHOP
Alankar
Next to RAMRAJ Showroom





280, Kamarajar Salai,
Villakkuthoon,
Madurai-625 009.
Cell : 98941 41402

## குறு, சிறு நிறுவனங்கள் மறுவகைப்படுத்தலுக்கு முன் வழங்கப்பட்ட வரி அல்லாத அனைத்து பயன்களையும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பதாக அறிவிப்பு

குறு, சிறு நிறுவனங்கள் மறுவகைப்படுத்தலுக்கு முன் வழங்கப்பட்ட வரி அல்லாத அனைத்து பயன்களையும் மூன்றாண்டுகளுக்கு நீடிப்பதற்கான அறிவிக்கை 18.10.2022 அன்று வெளியிடப்பட்டது.

தொழிற்சாலையில், இயந்திரத்தில் அல்லது சாதனத்தில் அல்லது வருவாயில் அல்லது இரண்டிலும் சேர்த்து செய்யப்பட்ட முதலீட்டில் மாற்றம் இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு வரி அல்லாத சலுகைகள் அனைத்தும் தொடரும். பதிவு செய்யப்பட்ட எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்களுக்கு சலுகைகள் ஓராண்டுக்கு பதிலாக மூன்று ஆண்டுகளாக நீடிக்க மத்திய அரசின் எம்.எஸ்.எம்.இ., அமைச்சகம் அனுமதித்துள்ளது. அரசின் கொள்முதல் கொள்கை, தாமதமான பணப் பட்டுவாடா உள்ளிட்ட அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்கள் வரி அல்லாத பயன்களில் அடங்கும்.

## கைவினைக் கலைஞர்களுக்காக இணையப்பக்கத்தை தொடங்கியுள்ளது மத்திய அரசு

கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன், நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆண்டுதோறும் சுமார் 200 உள்நாட்டு சந்தைப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விண்ணப்பித்தல் முதல் கடைகள் தேர்வு வரையிலான ஆன்லைன் நடவடிக்கை மற்றும் இறுதியாக கடைகள் ஒதுக்கீடு வரை அனைத்தும் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து கைவினைக்கலைஞர்களுக்கும் சமமான, நியாயமான மற்றும் வெளிப்படையான வாய்ப்புகளை வழங்கும். கைவினைப் பொருட்களுக்கான மேம்பாட்டு ஆணைய அலுவலகம், கைவினைக் கலைஞர்களுக்கான http://indian.handicrafts.gov.in என்ற இணையப்பக்கத்தை தொடங்கியுள்ளது. இதன் மூலம், தகுதியுடைய அனைத்து கைவினைக் கலைஞர்களும் சந்தைப்படுத்தும் நிகழ்வுகளில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம்.

## சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மின் கட்டணம் குறைப்பு

2022-23ம் ஆண்டிற்கான திருத்தி அமைக்கப்பட்ட மின்சார கட்டணம் 10.09.2022 முதல் மின்கட்டண ஆணை எண். 7/22, நாள் 09.09.2022-ன் படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வினால், தொழில் நிறுவனங்கள் அதிகப்படியான கட்டணத்தை செலுத்த வேண்டி உள்ளது.

மின்கட்டணத்தை குறைக்க வேண்டி பல்வேறு தொழில் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் (நம் சேம்பர் உட்பட) அரசுக்கு கோரிக்கை விடுத்தன. இதனை கருத்தில் கொண்டு, கோரிக்கைகளை ஏற்று, குறைந்தழுத்த மின் இணைப்பு (Low Tension III-B) கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு உச்சபட்ச பயன்பாட்டு நேரத்தில் வசூலிக்கப்படும் மின்கட்டணத்தை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கலாம் என முடிவு செய்து உரிய கொள்கை வழிகாட்டுதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## மதுரை, மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் புதிய இணையதள முகவரி துவக்கம்

*– திருக்கோவில் அறநிலையத் துறை நிர்வாகம் அறிவிப்பு*

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கென, முன்னர் தனியார் நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட இணையதளமான www.maduraimeenakshi.org மூடப்பட்டு, அதற்கு பதிலாக தமிழ்நாடு அரசு இணையதளமான (Official Website) என்ற அலுவல்சார் இணையதளம் https://maduraimeenkshi.hrce.gov.in உருவாக்கப்பட்டுள்ளது. இனி இந்த புதிய இணையதளத்தின் மூலம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூரிய புதிய இணையதள முகவரியைத்தவிர, இத்திருக்கோவிலுக்கு வேறு எந்த இணையதளமும் கிடையாது என்று இத்திருக்கோவிலின் அறிநிலையத்துறை நிர்வாகம் தெரிவித்ததுள்ளது.




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

ரேவதிஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

## அங்கத்தினர்கள் கருத்து

நம் சேம்பர்-ன் 15ம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். சமூக பெரியோர்களும், தொழில் அதிபர்களும் நமது சமூக மக்கள் குடும்பத்தினர்களுடன் மற்றும் நம் சேம்பர் உறுப்பினர்களின் குடும்பத்துடன் வந்த காட்சிகளும், மேடையில் நடந்த அன்றைய நிகழ்ச்சிகளும் பார்க்கும்பொழுது, தொழில் மையம் என்று நமது சேம்பர் ஆரம்பிக்க எங்கள் குழுவினரின் எண்ணம் ஆசைகள் அனைத்தும் மலர்ந்துவிட்டதாக கருதினேன். ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி, சிறந்த தொழில் முனைவோருக்கு விருது வழங்குதல், சிறப்பாக பணியாற்றியவர்களை கௌரவித்தல் என பல்வேறு நிகழ்ச்சிகளைக் காண மெய்சிலிர்ப் படைந்தேன்.

**– கே.ஜி. நாராயணன்**
ஆலோசகர், ஸௌ. சேம்பர்.

கடந்த 1-ம் தேதி அன்று நடைபெற்ற சேம்பர்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டமான பிரதமமந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம். - PMEGP கூட்டம் மிக சிறப்பான முறையில் இருந்தது. மத்திய அரசு வழங்கும் கடன், மானியம், அதை எப்படி பெற வேண்டும் என மிகத் தெளிவான முறையில் விளக்கம் தந்துள்ளார். பல்வேறு கேள்விகளுக்கு சிறப்பு விருந்தினர் மிகத் தெளிவாக பதிலளித்தார். இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்த நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் குழுவினருக்கு மனமார்ந்த நன்றி.

**– கே.ஆர். பாலன்.**
ஆயுட்கால உறுப்பினர், ஸௌ. சேம்பர்

வருடத்திற்கு 12 மீட்டிங் நடக்கிறது. மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை சரியாக நடைபெறுகிறது என்றாலும், அது வேலை நாட்கள் என்கிற காரணத்தால் பெரும்பாலும் பங்கு கொள்ள முடிவதில்லை. என்னைப்போல் பலரும் இதன் காரணமாக வராமல் இருப்பதற்கான காரணமும் இருக்கலாம். ஆகையால், ஞாயிற்றுக்கிழமைகளில் குறைந்தபட்சம் 3 நிகழ்ச்சிகளையாவது நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப்போன்றவர்கள் பங்குகொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும். நன்றி.

**– பி.ஜெ. குமரேஷ்**
சந்தா உறுப்பினர். ஸௌ. சேம்பர்.

### திருத்தம்

சென்ற அக்டோபர் மாத இதழின் 22ம் பக்கத்தில் வெளியான அரசு பொது விடுமுறை நாட்கள் பகுதியில் 2022 என்பதை 2023 என திருத்தி வாசிக்கவும்.

### திருக்குறள்

**கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்.**

**பொருள்:** கோபத்தால் ஒரு தீங்கு செய்துவிட்டவருக்கும் திருப்பித் தீங்கு செய்யாதிருப்பது குற்றமற்றவர்களுடைய கொள்கை.

அதிகாரம் 32 — இன்னா செய்யாமை (யாருக்கும் தீங்கு செய்யாதிருப்பது) — துறவறவியல்

**மழை நீரை சேமிப்பீர்!...**


K.D. பத்மினி
சத்குரு ஸரணம் சரணம்
98946 71401 99426 71819
63819 26819 90255 17366
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ⁕ வரவேற்பு அமைப்பாளர்
பத்மினி ஈவன்ட்ஸ்
★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு ★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.



Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award
www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in
தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist
Your Name is Your Life
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai
For Appointment 98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்



**JSW Steel**



# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj®**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*







# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags

Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66

(All sizes available)

*Used second hand Woven bags also available

37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014





Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder

• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

# A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*

No. 45, Kakkathoppu Street,

Town Hall Road, Madurai - 1.

Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*

66, Kamarajar Street,

Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.

Cell : 73737 82633

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.11.2022 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775

FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

# onVGPrint.com

— A unit of VIGNESH GRAPHICS —

visit :
www.onvgprint.com

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

# வேல் மருத்துவமனை

## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

VSOC Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

**Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement**

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



24hrs Service

**Dr. K.N. சுப்ரமணியன்** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை

## Electronic Jacquard




**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**

- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

## SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org